3rd August 1965]

திரு. வை. சங்கரன் : பொதுவாக நகரங்களில் சிறு சிறு தெருக்களில் கூட கோடவுன்கள் வாடகைக்கு எடுத்து லாரிகளைக் கொண்டு வந்து வைத்து போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்கிறார்கள். இம்மாதிரி சிறு சிறு தெருக்களில் உள்ள கட்டடங்களை கோடவுன்களுக்கு லீஸ் கொடுக்கக் கூடாது என்று தடை செய்ய முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொதுவாக லாரிகளை லாரி ஸ்டாண்டுகளில் தான் நிறுத்த வேண்டும் என்பதான விதி இருக்கிறது. இருந்தும் அதை அனுசரிக்காமல் ரோடுகளில் ஆங்காங்கே லாரிகளை நிறுத்துகிறார்கள். அதைத் தடுக்க முடியவில்லை. லாரிகளை ஸ்டாண்டுகளில்தான் நிறுத்த வேண்டும் என்கிற விதிப்படி நடந்து கொண்டாலேயே கஷ்டம் ஏற்படாது.

திரு. வை. சங்கரன் : லாரிகளை ஸ்டாண்டில்தான் நிறுத்த வேண்டும் என்றாலும் சாமான்களை ஏற்றி இறக்க கோடவுன்கள் உள்ள இடத்திற்குக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஆகவே தான் சிறுசிறு தெருக்களில் உள்ள இடங்களைக் கோடவுன்களுக்கு லீசுக்கு கொடுக்கக் கூடாது என்று தடை செய்யமுடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரி உத்தேசம் சர்க்காரிடத்தில் இல்லை.

ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான விளம்பரங்கள்

***65 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம், சாதனைகள் நாடகம் மூலம் விளம்பரப்படுத்தப்படுகின்றனவா ?

(இ) ஆம் எனில், 1965-ம் வருடம் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் எந்தெந்த ஊர்களில் நடத்தப்பட்டன ?

(உ) அவற்றிற்கான செலவுத் தொகை எவ்வளவு ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) & (உ) சபையில் ஒரு அறிக்கை * சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவரவர்களே, ஐந்தாண்டுத் திட்ட பிரச்சாரத்திற்கென்று எத்தனை நாடகக் குழுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன ? அந்த நாடகக் குழுக்களுக்கு ஒவ்வொரு நாடகம் நடத்துவதற்கும் எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : எத்தனை நாடகக் குழுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஒவ்வொரு நாடகத்திற்கும் 200 ரூபாய் கொடுக்கப்பட்டு

---

* 677–681-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

வருகிறது. எந்தெந்த நாடகங்களை அங்கிகரிக்க வேண்டுமென்பதை அந்தந்த மாவட்டத்திலேயுள்ள விளம்பர அதிகாரி பரிசீலனை செய்து அதை இங்கே அனுப்பி வைக்கிறார். இங்கேயும் அது பரிசீலனை செய்யப்படுகிறது. எத்தனை குழுக்களுக்கு அங்கிகாரம் அளிக்கப்பட்டது என்ற விவரத்திற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சார நாடகங்களில் காதல் கட்டங்கள் அதிகமாக இருக்கின்றன என்ற கருத்து இருந்து வருகிறது. கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் ஒரு நாடகத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகின்றபொழுது இதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரிப் பகுதிகளை விளம்பரம் செய்யாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இந்த நாடகங்கள் திட்டங்களை மக்களுடைய மனத்திலே பதிய வைக்கும்படியாக இருக்க வேண்டும். அந்த வகையிலே என்ன என்ன கருத்துக்களைச் சேர்க்கலாமோ அவைகளைத்தான் சேர்க்கிறோம். முழுக்க முழுக்க காதல் கட்டம் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவரவர்களே, இந்த நாடகப் பிரச்சாரத் திட்டத்தின் கீழ் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் அமைந்திருக்கிறதா ? அந்த நோக்கத்தைப் பிரச்சாரம் செய்கின்ற முறையில் திரைப் படங்கள், நாடகங்கள் உருவாகியிருக்கின்றனவா ? இல்லையென்றால், இனிமேல் உருவாக்க அரசாங்கம முயற்சி எடுக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இதில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமும் இருக்கிறது. அதற்கென திரைப் படமும் இருக்கிறது. நாடகங்களும் அவ்வப்பொழுது நடத்திக் காண்பிக்கப்படுகின்றன.

திரு. து. ப. அழகமுத்து : அங்கீகரிக்கப்பட்ட நாடகங்களின் வசனத்தை அச்சடித்து, நாடகங்களைப் பார்க்க முடியாதவர்கள் படித்துக் கொள்வதற்கு வசதியாக, விநியோகம் செய்வார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அவ்வாறு விநியோகிப்பதற்கு உத்தேசமில்லை.

திரு. வை. சங்கரன் : முக்கிய விழாக்கள், வைபவங்கள் இவைகளிலே தனியார் இந்த நாடகங்களை நடத்த விரும்பினால், நாமினல் சார்ஜிலே நடத்திக் காண்பிப்பதற்கு அரசாங்கம் திட்டங்கள் போட்டிருக்கிறதா ? இல்லாவிட்டால் இனிமேல் அதுமாதிரித் திட்டங்கள் போடும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : எந்தெந்த விழாக்களிலே, வைபவங்களிலேயெல்லாம் நாடகம் நடத்த வேண்டுமோ அங்கேயெல்லாம் நாடகங்கள் நடத்திக் கர்ண்பிக்கப்படுகின்றன. தனியார்

3rd August 1965]

இந்த நாடகங்களை நடத்த வேண்டுமென்று விரும்பி அதற்காக முயற்சி எடுத்தால் அவர்கள் தங்களுடைய சொந்தப் பொறுப்பிலே தான் நடத்திக் கொள்ள வேண்டும்.

திரு. எஸ். முருகையன் : அண்மையிலே திரு. காமராஜ் அவர்கள் பேசும்பொழுது, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும் ஏழைகளுக்கு அவை பயன்படவில்லை, பணக்காரர்களுக்குத்தான் பயன்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்ற கருத்துக்களையும் இந்த நாடகங்கள் மூலம் பிரச்சாரம் செய்வார்களா ?

(பதில் இல்லை)

Kodaikanal Hills

* 66 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether any steps have been taken to popularise and improve Kodaikanal as an important hill station and tourist centre; and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) & (இ) சுற்றுப் பயணங்களை ஊக்குவிப்பதற்காகவும், கொடைக்கானலை மலை வாசஸ்தலமாகப் பிரபலப்படுத்துவதற்காகவும் கொடைக்கானலில் சுற்றுலா மாளிகை ஒன்றைக் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கொடைக்கானலுக்கு வரக் கூடிய சுற்றுப் பயணிகளுக்கு அது வசதியாக இருக்கும். கொடைக்கானல் ஏரியில் மேற்கொண்டு கூடுதலாக படகு வசதிகளையும் இதர சௌகர்யங்களையும் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. வார முடிவு விடுமுறையின்போது, மதுரை—கொடைக்கானல், வைகைத் தேக்கம்—மதுரை ஆகியவைகளுக்குச் சுற்றுலா வசதியையும் இந்த இலாகா அளித்து வருகின்றது.

திரு. வை. சங்கரன் : கொடைக்கானல் மலையிலே ஹாலிடே ஹோம் என்ற ஹோட்டல் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் மட்டுமே வந்து தங்க, உணவருந்த வசதியளிக்கும் வகையிலே இருக்கிறது. பொதுவாக டவுனிலே சௌகரியங்களோடு, பயணிகள் வந்து தங்குவதற்கு மட்டுமல்லாமல் போர்டிங் வசதியும் செய்து தரக் கூடிய வகையிலே ஒரு கட்டடம் கட்டுவதற்கும் உத்தேசம் உண்டா ? கீழ் மட்டத்தில் உள்ளவர்கள், சாதாரண பயணிகள், நடுத்தர மக்கள் எல்லோருமே தங்கிக்கொள்ளக்கூடிய வசதியுள்ள ஒரு ஹோட்டல் அமைப்பதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இதை அரசாங்கம் கவனத்தில் வைத்துத் தான் 8 லட்சம் ரூபாய் செலவிலே 50 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு பயணிகள் விடுதி அமைக்க அனுமதி வழங்கியிருக்கிறது.